# அறத்துப்பால் - இல்லறவியல் - அதிகாரம் 11

## செய்ந்நன்றியறிதல்

## ( தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாதிருத்தல் )

பரிகாரம் இல்லாத குற்றம் செய்ந்நன்றி மறத்தல் ஆகும்.
அக்குற்றம் தன்னிடம் வராமல் பாதுகாத்தல் பொருட்டு இல்லறம் வழுவாது நடத்த விரும்புபவருக்கு செய்ந்நன்றி அறிதல் - மறவாதிருத்தல் - அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாழ்க்கையில் முதன்மையான அறம் விருந்தோம்பல். ஆகவே அது முதலில் சொல்லப்பட்டது. குற்றங்களில் - பாபங்களில் - பரிகாரம் இல்லாத குற்றம் செய்ந்நன்றி மறத்தல். ஆகவே, விலக்க வேண்டியவற்றுள் அது முதன்மையாகக் கூறப்படுகிறது.

**குறள்: 1 - 3** செய்ந்நன்றியறிதலுக்குக் காரணம்

காரணமில்லாமல், உரிய காலத்தில், பயன் கருதாமல் செய்யும் உதவியின் பயனுக்கு அளவில்லை.

**குறள்: 4, 5**

தகுதியானவருக்குச் செய்த உதவிக்கும் அளவில்லை.

**குறள்: 6, 7**

நன்மை செய்தவர் நட்பினை என்றும் விடலாகாது.

**குறள்: 8** மறக்கக்கூடாததும் மறக்கவேண்டியதும்

நன்மையை மறக்கக்கூடாது; தீமையை மறந்து விட வேண்டும்.

**குறள்: 9**

நன்றல்லாததை மறக்கும் திறம்

**குறள்: 10**

செய்நன்றி மறத்தலின் குற்றம்



# 1. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.

(ஒருவன் பிறருக்கு முன்னர்) உதவி செய்யாதிருந்தும் அவர் தமக்குச் செய்யும் உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் ஈடாகக் கொடுத்தாலும் ஒப்பாக ஆகாது.

உதவி = உபகாரம் = நன்மை

ப்ரதி உபகாரம் = பதிலுதவி

ஆற்றல் அரிது – ஸமமாகக் கொடுத்தல் இயலாது.

காரணம் இல்லாமல் செய்யும் உதவிக்கு அளவில்லை.

ப்ரதியுபகாரமாக இல்லாமல் செய்யும் உதவிக்கு ஈடில்லை.



## 2. காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
## ஞாலத்தின் மாணப் பெரிது.



**உரிய காலத்தில் செய்யப்பட்ட உதவியானது சிறிதாக இருந்தாலும் (உதவிய அக்காலத்தை வைத்துப் பார்க்கும் பொழுது) அது உலகத்தைவிட மிகப்பெரியதாகும்.**

காலத்தினால் = அவசரமான உதவி தேவைப்படும் காலத்தில். (காலத்தினால் எனும் மூன்றாம் வேற்றுமைச் சொல் இங்கு காலத்தில் என ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது வேற்றுமை மயக்கம்.)

ஞாலம் = உலகம்

மாணப் பெரிது = மிகப்பெரியது.

உதவியின் அளவு அது செய்யப்பட்ட காலத்தைப் பொறுத்தது.

## 3. பயன்தூக்கர் செய்த வுதவி நயன்தூக்கின் நன்மை கடலில் பெரிது.

**( எதிர்ப்) பயனைக் கருதாமல் செய்யப்பட்ட உதவியாகிய (உதவிக்குக் காரணமாகிய) அன்பினை ஆராய்ந்து பார்த்தால் அதன் பயன் கடலைவிடப் பெரியதாகும்.**

**பயன் கருதாமல் செய்த உதவிக்கும் அளவில்லை.**

இவை மூன்று பாட்டாலும் காரணமின்றிச் செய்ததும், காலத்தில் செய்ததும், பயன் கருதாமல் செய்ததும் ஆன உதவி அளவில்லாதது என்பது உணர்த்தப்பட்டது.

அளவில்லாததற்கு பதிலுபகாரம் செய்ய இயலாது என்பதால் செய்ந்நன்றி மறவாதிருத்தல் வேண்டும் என்பது அறிவுறுத்தப்படுகிறது.





# 4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரி வார்.

தமக்கு ஒருவர் தினையளவினதாக சிறிய உதவியைச் செய்தாலும் அவ்வுதவியின் பயனை அறிந்தவர் அவ்வுதவியைப் பனையளவானதாகக் கருதுவார்.

அறிவுடையவர் பிறர் தமக்குச் செய்த சிறிய உதவியையும் பெரியதாகக் கருதி மறவாமல் நினைவில் வைத்திருப்பர்.



# 5.உதவி வரைத்தன்று உதவி உதவி
# செயப்பட்டார் சால்பின் வரைத்து.



ஒருவரிடமிருந்து உதவி பெற்றவர் பதிலுதவி செய்வது அவர் பெற்ற உதவியின் அளவைப் பொறுத்ததல்ல. அவரது தகுதியின் அளவைப் பொறுத்தது.

சால்பின் வரைத்து = சால்பு – தகுதி. சால்பு எவ்வளவு பெரிதாய் உள்ளதோ உதவியும் அவ்வளவு பெரிதாம்.

காரணம் இன்றியும் உரிய காலத்திலும் பதில் எதிர்பாராமலும் பெற்ற உதவியின் பயன் அளவிடற்கரியது என்பது போல, உதவி பெற்றவர் வாய்ப்புக்கிடைக்கும் பொழுது பதிலுதவி செய்வதன் அளவு அவர் பெற்ற உதவியின் அளவைப் பொறுத்ததல்ல. அவரது அறிவின் தகுதிக்கு ஏற்ற அளவு ஆகும்.

இவை இரண்டு பாட்டாலும் தகுதிவாய்ந்த அறிவுடையவர்க்குச் செய்யும் உதவியும் அளவிடற்கரியது என்று கூறப்பட்டது.

# 6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
# துன்பத்துள் துப்பாயார் நட்பு.



**துன்பம் உண்டான காலத்தில் தமக்கு உதவியவரது நட்பினை விடாதிருக்க வேண்டும். அறிவொழுக்கங்களில் குற்றமற்றவர்களது நட்பினை மறவாதிருக்க வேண்டும்.**

மாசற்றார் – அழுக்காறு அவா வெகுளி முதலான குற்றம் அற்ற அறிவும் ஒழுக்கமும் உடையவர்.

கேண்மை = நட்பாய் இருக்கும் தன்மை.

ஆபத்துக் காலத்தில் தமக்கு உதவியவரது நட்பை என்றும் விட்டுவிடாதிருக்க வேண்டும். அது நன்றிக்கடன் ஆகும். அது இம்மைக்கு உறுதியாகும். (உறுதி = உற்றதுணை)

அறிவும் ஒழுக்கவும் உடையவர்களுடைய நட்பினை விரும்பி ஏற்படுத்திக் கொண்டு என்றும் விடாதிருக்க வேண்டும். அது மறுமைக்கு உறுதியாகும்.

இம்மைக்கு உறுதி கூற வந்தவர் மறுமைக்கும் உறுதி உடன் கூறினார்.

**இம்மை அடக்கத்தைச் செய்து புகழாக்கி**
**உம்மை உயர்கதிக்கு உய்த்தலால் – மெய்ம்மையே**
**பட்டாங்கு அறமுரைக்கும் பண்புடையாளரே**
**நட்டார் எனப்படு வார்.                    – அறநெறிச் சாரம்.**

## 7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
## விழுமம் துடைத்தவர் நட்பு.

**தமக்கு உண்டான துன்பத்தை விரைந்து நீக்கியவருடைய நட்பினை அடுத்தடுத்து வருகின்ற எழுவகைப் பிறப்பிலும் (நன்றி மறவாத அறிவுடையோர்) நினைப்பர்.**

உள்ளுவர் = நினைப்பர்

விழுமம் = துன்பம்

துடைத்தவர் – விரைவு கருதி இறந்த காலத்தில் கூறப்பட்டது.

இவை இரண்டு பாட்டாலும் உதவி செய்தவருடைய நட்பினை என்றும் விடலாகாது என்பது கூறப்பட்டது.





# 8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று.

பிறர் செய்த நன்மையை மறந்து விடுவது அறம் அல்ல. தீமையை அப்பொழுதே மறந்து விடுவது அறமாகும்.

நன்றி = நன்மை

நன்று = அறம்

நன்றல்லது = தீமை

பிறர் நன்மையும் தீமையும் செய்தவிடத்து மறப்பதும் மறவாததும் வகுத்துச் சொல்லப்பட்டது.

# 9. கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
# ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

(தமக்கு முன்னொரு காலத்தின் நன்மையைச் செய்தவர் பின்னர்) கொல்லுதலைப் போன்ற தீமையைச் செய்தாலும் அவர் முன்னர் செய்த நன்மை ஒன்றினை நினைத்துப் பார்க்க (அவர் மேல் ஏற்படும் வெறுப்புணர்வு) நீங்கிவிடும்.

தினையளவு உதவியைப் பனையளவாய் நினைக்க வெறுப்பு நீங்கிடும்.

இதனால் நன்றல்லதை அன்றே மறக்கும் முறை கூறப்பட்டது.



## 10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
## செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எவ்வளவு பெரிய அறங்களை அழித்தவருக்கும் (அப்பாவத்திலிருந்து) விடுபட பரிகாரம் (அறநூல்களில் சொல்லப்பட்டு) இருக்கிறது. ஒருவன் செய்த நன்மையை மறந்தவருக்கு (அப்பாவத்திலிருந்து) விடுபடும் வழி (அறநூல்களில் சொல்லப்பட) இல்லை.

ஆன்முலை அறுத்தல் அறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருசிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி இல்லென
அறம்பாடிற்றே ஆயிழை கணவ.

–புறநானூறு 34



ஆன்முலை யறுத்தல் – கோஹத்தி
மகளிர் கருசிதைத்தல் – சிசுஹத்தி
பார்ப்பார்த் தப்புதல் – ப்ரஹ்மஹத்தி

இவற்றுக்கெல்லாம் கழுவாய் உண்டு, ஒருவன் செய்ததை மறந்தவனுக்கு உய்வு இல்லை என அறநூல்கள் சொல்கின்றன.

இதனால் செய்ந்நன்றி மறத்தலின் குற்றம் கூறப்பட்டது.



Presented by: Harper Russo

Studio Shodwe

# THANK YOU

## FOR YOUR ATTENTION

**Email Address**

hello@reallygreatsite.com

**Our website**

www.reallygreatsite.com

**Phone Number**

+123-456-7890